# Certificate of Appreciation

This is to certify that

Dr. P. Kasivairavan

has attended and presented a paper on the title

Tamil Elakkiyamum Manitha Valkai Sulalum.

in the

**INTERNATIONAL CONFERENCE ON**
**DEPICTION OF RELIGION AND HUMAN SOCIETY IN TAMIL LITERATURE**

organized by

Kongunadu Arts and Science College, Coimbatore, Tamilnadu, India
Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia
Thirupputhur Thiruneri Thirumandram, Thirupputhur
Colombo Tamil Sangam, Sri Lanka
Sydney Tamil Valarchi Mandram, Australia
Na. Subbureddiyar 100 Educational Trust, Chennai
New Century Book House, Chennai
Dr. M. Aruchami Research Foundation, Coimbatore, Tamilnadu

held on

5th December 2018

at

Kongunadu Arts and Science College
Coimbatore, Tamilnadu

| | | | |
|---|---|---|---|
| **Dr. K. MURUGESAN**<br>Convener & Head<br>Department of Tamil<br>Kongunadu Arts and Science College<br>Coimbatore | **Dr. M. CHITHAMBARAM**<br>Associate Prof. in Tamil<br>Conference Co-ordinator<br>Thirupputhur Thiruneri Thirumandram | **Professor Dr. S. KUMARAN**<br>Conference Co-ordinator<br>Department of Indian Studies<br>Faculty of Arts & Social Sciences<br>University of Malaya<br>Kuala Lumpur, Malaysia | **Dr. C. A. VASUKI**<br>Secretary & Director<br>Kongunadu Arts and Science College<br>Coimbatore |
| **Dr. S. CHANDRIKA**<br>Conference Co-ordinator<br>Sydney Tamil Valarchi Mandram, Australia | **Dr. S. RAMALINGAM**<br>Founder<br>Na. Subbureddiyar 100 Educational Trust<br>Chennai | **Mr. S. SARAVANAN**<br>Managing Director<br>New Century Book House<br>Chennai | |

# தமிழ் இலக்கியங்களில்

## சமயமும் சமூகமும்

தொகுதி – II




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் சு. குமரன்

முனைவர் சு. இராமலிங்கம்

திரு. கி. பொன்னுதுரை

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள் : முனைவர் க. முருகேசன்
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் சு. குமரன்
முனைவர் சு. இராமலிங்கம்
திரு. கி. பொன்னுதுரை

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : நவம்பர், 2018

வெளியீடு : தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641029.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 9843273994, 7358863327

பக்கங்கள் : XVIII + 488 = 506

விலை : உரூ. 400/-

ISBN : 978 - 93 - 80800 - 90 - 5


# International Conference on Depiction of Religion and Human Society in Tamil Literature


Editor's : **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**
**Dr. S. Kumaran. Dr. S. Ramalingam**
**Mr. K. Ponnudhurai**

Copyright's : Editors

First Edition : November, 2018

Published : **Department of Tamil**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : XVIII + 488 = 506

Prize : **Rs. 400/-**

119. முனைவர் அ. பாரதிராணி 616
வள்ளுவர் வலியுறுத்தும் சமூகம்

120. சு. தேவி 621
ஆத்தங்கரை ஓரம் - சமுதாயச் சிந்தனை

121. ம. துரை 625
ஆசாரக்கோவை உணர்த்தும் சமுதாயம்

122. பேராசிரியர் வை. குணசேகரன் 631
தமிழகத்தில் கோயிலும் குடியிருப்பும்

123. வி.சி. காமராஜ் 637
வைரமுத்து கவிதைகளில் சமூகச் சிந்தனை

124. முனைவர் பா. காசிவைரவன் 641
தமிழ் இலக்கியமும் மனித வாழ்க்கைச் சூழலும்

125. முனைவர் போ. மாரிசாமி,
முனைவர் இராம. சந்திரசூடன் 646
தமிழ் இலக்கியங்களில் நிர்வாக மேலாண்மைச் சமூகம்

126. மா. முத்துராமன் 651
சங்க இலக்கியங்களில் சமூகப் பண்பாடு

127. முனைவர் ஐ. நிலோபர் பேகம் 656
திருக்குரானும் திருமணக் கொடையும்

128. முனைவர் ஆ. பாண்டி 659
புலம்பெயர்தேயத்தின் சமூகச் சூழலும் பின்னணியும்

129. முனைவர் சி. பரமேஸ்வரி 664
திருப்பரங்குன்றத் திருத்தலம்

130. சு. ஷிரின் பர்கானா, முனைவர் து. அல்பேரிஸ் 669
திருக்குர்ஆன் கூறும் தர்மம் (ஜகாத்)

131. முனைவர் க. சொல்லேருழவன் 673
வள்ளலாரின் மத நல்லிணக்கம்

132. கவிஞர் புதுகை வெற்றிவேலன் 678
இளங்கோவடிகள் காட்டும் சமூகம்

133. Prof. S. Nagaraja 683
Realistic Portrayal of Society in the Select Short Stories
of Nanjil Nadan.

134. மா. கிருஷ்ணவேணி 690
பத்துப்பாட்டு நூல்களில் பண்டைத் தமிழரின் சமூகம்

135. முனைவர் மு. கவிதா 696
தமிழ் வளர்ச்சிக்கு சைவ சமயத்தின் பங்கு

# 124. தமிழ் இலக்கியமும் மனித வாழ்க்கைச் சூழலும்

**முனைவர் பா. காசிவைரவன்**
உதவிப்பேராசிரியர், வணிகவியல் துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி
திருப்பத்தூர் - 630211
சிவகங்கை மாவட்டம்

## வாழ்க்கைச் சூழல் (Human Life Cycle)

அண்டவெளியாகிய இந்த ஆகாயத்தில் உள்ள சூரியக் குடுபம்பம் தோற்றம் பற்றி, அறிய முடியாத பல்வேறு அதிசியங்களை தன்னிடம் வைத்துள்ளது. அதில் ஓர் அதிசயம்தான் நாம் வாழும் பூமி. ஏனெனில் பூமி மட்டும்தான் உயிரினங்கள் வாழும் சூழ்நிலை மண்டலமாக உள்ளது. உலகில் வாழும் உயிரினங்களில் மனிதன் மட்டும் தான் தனிச் சிறப்பு உடயனவனாக வாழ்ந்து வருகிறான். சமுதாயச்சூழல் என்ற கூட்டமைப்பின் அடித்தளமாக அமைவது தனிமனித வாழ்கையாகும். தனிமனிதர்களின் முன்னேற்றமானது குடும்பமாகவும், குடும்ப முன்னேற்றமானது சமுதாய முன்னேற்றமாகவும், இச்சமுதாய முன்னேற்றமானது நாட்டின் முன்னேற்றமாகவும் ஒரு நாட்டின் முன்னேற்றமே உலக முன்னேற்றமாகவும் அமையும். உலகம் என்பதை,


> ***"நிலம், தீ, நீர், வளி விசும்போடு ஐந்தும்***
> ***கலந்த மயக்கம் உலகம் ஆதலின்."***
> ***(தொல்.மரபு.91)***

எனக் குறிப்பார் தொல்காப்பியர்.

இந்த உலகம் ஐம்பூதங்களின் (பருப்பொருள்) சேர்க்கையாகவே உள்ளது என்பது இன்றைய அறிவியலாளரும், மெய்யியலாளரும் கண்ட உண்மை ஆகும். அதனை ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்அறிந்து சொன்ன தொல்காப்பியரின் மெய்யறிவு வியப்பைத் தருவதாகும். இந்த வகையில் பார்க்கும்போது உலக முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் ஒரு முக்கிய அடிப்படையாக அமைவது தனிமனிதர்களின் வாழ்க்கையாகும். இத்தகைய வாழ்க்கையை வளப்படுத்துவதையும் வளப்படுத்திய வாழ்க்கையை எடுத்துரைப்பதையுமே இலக்கியங்களின் நோக்கமாக கொண்டுள்ளன எனலாம். எனவே மனித வாழ்க்கை சூழல் பற்றி சமூகக் கருத்துக்களைக் காண்பதாய் இக்கட்டுரை அமைகின்றது.

## அறிமுக கட்டம் (Introduction Stage)

பூமியில் உயிரினங்களின் தோற்றம் என்பது இயற்கைக்கும் நமக்கும் இடையே உள்ள ஒரு இடைவெளி, இதை நாம்




மனித வாழ்க்கைச் சூழல் ( Human Life Cycle)

இயற்கையிடமே விட்டுவிடலாம். காடுகளில் மனிதன் வாழ்ந்தபோது நெருப்பு, உணவு, உடல் தோற்றத்தை மறைக்கும் இலைகள் மற்றும் தோல்களால் ஆன உடை, தங்கும் இடம், கூட்டமாக வாழும் சூழல் இதனையே மனித இனத்தின் நாகரிகம் மற்றும் பகுத்தறிவின் முதல் அறிமுக நிலையாக காணலாம். இதனையே நாலடியார்

> ***"வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்***
> ***வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்***
> ***வைகலும் வைகல்தம் வாழ்நாள் மேல் வைகுதல்***
> ***வைகலை வைத்துணரா தார்"*** **(நாலடி: 39)**

என்ற பாடலின் மூலம் விளக்குகிறது. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் தனி மனித வாழ்க்கையை வளம் அடையச் செய்கின்றன. ஐந்தறிவு உயிர்களில் இருந்து மாறுபட்டு பகுத்தறியும் அறிவாக உள்ளது இந்த மானுட வாழ்க்கை எனக் குறிப்பிடுகிறார்.

## வளர்ச்சிக் கட்டம் (Growth Stage)

காடுகளில் இருந்து நகரங்களை உருவாக்கி தனக்கென மொழி, கலாச்சாரம், கூட்டுக் குடும்பம், விவசாயம் மற்றும் பொருளாதாரம் என நாகரிகத்துடன் வாழ தொடங்கினான் மனிதன். நம்பிக்கை, சடங்குகள், மதிப்புக்கள், ஒழுக்கங்கள், தொழில் நுட்பங்கள், கலைகள் என அனைத்தும் பண்பாடு எனும் வாழ்வியல் மதிப்பு கோட்பாடுகளின் கூறுகள் எனலாம்.

> ***"கெடுவல்யான் என்பது அறிக தன்நெஞ்சம்***
> ***நடுஒரீஇ அல்ல செயின்"*** **(குறள்: 116)**

என்ற குறளின் மூலம் தன்நெஞ்சறிந்து நடுநிலை தவறி முறைகேடாக நடந்தால் தான் அழிந்துவிடுவோம் என்ற உணர்வு மேலோங்கியவன் நடுநிலையோடு நிற்பான் என்கிறது வள்ளுவம். இவ்உலகில் மனித இனம் வாழ்வியல் மதிப்பு கோட்பாட்டின் படி நடுவுநிலைமை என்பது எல்லா உயிர்களையும் ஒரே தன்மையாய் பாவித்தல் எனும் வாழ்வியல்

முறையை உருவாக்கித் தன் பண்பாட்டின் வளர்ச்சியை இக்காலகட்டத்தில் மனித இனம் பெற்றது என்பதை அறியமுடிகிறது.

## முதிர்ச்சிக் கட்டம் (Maturity Stage)

மனிதன் படிப்படியாகச் சமூகப் பொருளாதாரம், மருத்துவம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் பல்வேறு கண்டுபிடிப்புக்களை உருவாக்கினான். மாண்டவர்கள் மீண்டும் உயிர் பெறும் வழியைத் தவிர மனித உயிர்களை காக்கும் பிற அனைத்து வழிகளையும் கண்டறிந்தான் மனிதன் என்றால் அது மிகையாகாது. மருத்துவர்கள் சமுதாயத்தில் எல்லா காலங்களிலும் கடவுளுக்கு நிகராக உயிரைக்காக்கும் இறைவனாக மதிக்கப்படுகின்றனர். உயிரை மீட்டுத் தரும் மருத்துவரை, "இன்னுயிர் போத்தகுந் மருத்துவர்" எனக் கலித்தொகை குறிப்பிடுகிறது. மேலும்

> ***"உற்றவன் அளவும் பிணியளவும் காலமும்***
> ***கற்றான் கருதிச் செயல்"***

என வள்ளுவமும்,

> ***"அரும்பிணி உறுநர்க்கு வேட்பது கொடாது***
> ***மருந்தாயத்து கொடுத்த அறவோன்"***

என நற்றிணையும் காட்டுகின்றன. இக்காலக்கட்டத்தில் மனிதன் தன் இனத்தின் நவீன, நாகரிக வளர்ச்சியை அடைய தொடங்கினான் என்பதை முதிர்ச்சிக் கட்டமாகக் காணலாம்.

## செறிவுக் கட்டம் (Saturation Stage)

நவீன நாகரிக வளர்ச்சியினால் மனிதன் தன் அடையாளமான மொழி, கலாச்சாரம், பண்பாடு, குடும்ப சூழல், உடை மற்றும் தொழில்முறைகள் என நாகரிகத்தின் அடிப்படை முறைகளில் மாற்றங்கள் என்ற பெயரில் தன் மனிதத் தன்மையை இழந்து நவீன நாகரிகத்தின் செறிவு நிலையை இக் கட்டத்தில் அடைந்தான். மனிதன் மனிதம் இழந்தது பெரும் பொருள் நிலையில்லாதது என்பதனை,

> ***"ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த ஆயினும்ஊழ்***
> ***கூட்டும் படியன்றிக் கூடாவாம் - தேட்டம்***
> ***மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்***
> ***தரியாது காணும் தனம்". (நல்வழி-வெண்பா : 8)***

என்று நல்வழி வெண்பா உணர்த்தி நிற்கும். உலகத்தில் நாம் ஈட்டவேண்டிய பொருள் எண்ணிலடங்காது இருப்பினும், விதி என்ன நிர்ணயம் செய்கிறதோ அதைத் தவிர வேற எதுவும் நம்மிடம் சேராது, ஆதலால் பொருள் சேர்க்க வேண்டும் என்ற ஆசையை விட்டு அடுத்தவருக்கு உதவும் நல்ல மனிதர் இவர் என்ற மரியாதையை முதலில் பெறுங்கள் என ஔவையாரும். நிலை இல்லாத பொருள்களை நிலையானவை என்று எண்ணும் அற்ப அழிவு இழிவானது என்பதை,

*"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை". (குறள் 331)*

என வள்ளுவரும் எடுத்துரைக்கின்றனர். நவீன நாகரிக வளர்ச்சியின் விளைவுகளால் பல நன்மைகள் இந்த மனித சமுகத்திற்கு கிடைத்தாலும் மனிதன் தன் பழமையான வாழ்வியல் மதிப்பு கோட்பாடுகளின் நெறிமுறைகளில் இருந்து பாதை மாறி சுயநலம், ஆசை, மற்றும் ஆடம்பர தனிகுடும்ப வாழ்கை எனும் பாதையில் பயணிக்கின்றான் என்பதையும் மனிதன் நவீன நாகரிகத்தின் செறிவு நிலையின் மயக்கத்தில் மதி மயங்கி இருக்கிறான் என்பதையும் அறியமுடிகிறது.

**வீழ்ச்சிக் கட்டம் (Decline Stage):**

நவீன நாகரிகத்தின் செறிவு நிலையால் மனிதன் தன் பண்பாடு, மனிதத்தன்மையை இழந்து மனிதன் மனிதனையே அழிக்கும் நிலையில், கொடிய விலங்குகளைக் காட்டிலும் அபாயச் சூழ்நிலையில் சென்று கொண்டு இருக்கிறான் எனபதையே வீழ்ச்சிக் கட்டம் எனலாம். மனிதன் ஆடம்பரமாகத் தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக தன் வாழ் நாட்கள் முழுவதையும் தொலைத்த பின்பு தேடுகிறான். தன் வாழ்க்கையையும் காணவில்லை என்பதனையும், ஆடம்பரமும் பூர்த்தியாகவில்லை என்பதனையும் உணர்கிறான். எனினும் பொதுவாக மனிதனுக்கு போதும் என்ற எண்ணம் வருவதில்லை. எனவே வாழ்க்கை என்பது வாழ்வதற்காக மட்டுமே, தேடுவதற்காக அல்ல. பண்பாடு எனும் வாழ்வியல் மதிப்பு கோட்பாடுகளின் விதிகளுக்கு இணங்க வாழும் போது முன்னேறிய மனிதன் விதிகளுக்கு மாறாக நடக்கும் போது வீழ்கின்றான் என்பதை அறியமுடிகிறது. இதனையே, வரலாறும் உணர்த்துகிறது.

*"முறைகோடி, மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்"*

என வள்ளுவமும் - (குறள்- 559).

*"மாரி பொய்ப்பினும் வாரிகுன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக் கண்ணகல் ஞாலம்"
(புறம்-35)*

எனப்புறநானூறும்

*"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோல்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்"
(மணிமே. 7.8-9)*

என மணிமேகலையும்

*"நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார் நடை அல்ல
வாரம் கொண்டார் மற்று ஒருவற்காய் மனைவாழும்
தாரம் கொண்டார் என்ற இவர் தம்மைத் தருமம்தான்*

***ஈரும் கண்டாய் கண்டகர் உய்ந்தார் எவர் ஐயா?'***
***(கம்பனின் அரசியல்.கோட்பாடு (3247)***

எனக் கம்பனும் உரைக்கும் கருத்துக்கள் எல்லாம் இயற்கைக்கும், மனித ஒழுக்கத்திற்கும் உள்ள தொடர்பை உணர்த்துகிறன. தனி மனித ஒழுக்கமே சமூக ஒழுக்கமாக பிரதிபலிக்கின்றது. இதனையே,

***"மனத்தில் எழுந்தது ஓர் மாயக் கண்ணாடி***
***நினைப்பின் அதனில் நிழலையும் காணார்,***
***வினைப்பயன் போக விளக்கியும் கொள்ளார்,***
***புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே".***
***(பத்தாவது திருமுறை-1681)***

என்ற திருமுறைப் பாடலும் எடுத்துக்காட்டும். மானிடர் நினைப்பவை எல்லாவற்றையும் பிரதிபலித்துக் கொண்டிருப்பது காரண உடல். எண்ணங்களை நிறைந்த மனம் உடையவர் காரண உடலில் நிழலைக் கூட அணுகி அனுபவிக்க மாட்டார். எண்ணங்களால் உண்டாக்கிய வினைப் பயன்களை மாற்றிக் கொள்ளவும் அறியார். அறியாமையால் மீண்டும் காம வழியை விரும்பிப் போய் எண்ணங்களைப் பெருக்கிக் கொள்கின்றனர் எனத் திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார்.

## நிறைவுரை

வாழ்வியல் மதிப்பு கோட்பாடுகளை மனிதன் மீறுகிறான். வாழ்வியல் ஒழுக்க அறநெறிகளை மறந்து கற்ற கல்வி, பெற்ற தாய், தந்தையை மறந்தது காப்பகம் சேர்த்து அதர்மத்தை தருமமாக எண்ணி சுயநலம் கருதி வாழும் இந்த இழி நிலை மாற்றப்படவேண்டும்.

***எப்பொழுதெல்லாம் அறம் அழிந்ததுபோய்***
***மறம் மேலெழுகிறதோ, அப்பொழுதெல்லாம்***
***என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன் (4.7)***

***நல்லாரைக் காப்பதற்கும் தீயாரை***
***ஒடுக்குவதற்கும், தர்மத்தை நிலைநாட்டு வதற்காகவும்***
***யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன் (4.8)***

என்று கீதையில் கண்ணன் கூறுகிறான். எனவே வளரும் தலைமுறையினருக்கு மனித நாகரிகத்தின் அடிப்படையான மொழி, கலாச்சாரம், பண்பாடு, குடும்ப சூழல், உடை, கட்டுப்பாடு, வேற்றுமையில் ஒற்றுமை மற்றும் தொழில் முறைகள் என அனைத்திலும் மாறாத கொள்கைகளை பின்பற்றவும், தொழில் நுட்பங்களை ஆக்கப்பூர்வமானச் சிந்தனைகளை வளர்க்கப் பயன்படுத்தவும், வளரும் தலைமுறையினருக்கு மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டிய நிலையையே இன்று உள்ளது என்பதையே இந்த மனித வாழ்க்கைச் சூழல் காட்டுகிறது என்றால் அது மிகையாகாது.

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

தொகுதி - II





**பிரடாக் பிரிண்ட்**

476/1 பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

9789380800905